Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 286 | உள்ளூர் - 14.10.2026 | புதன்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 286 | வெளியூர் - 15.10.2026 | வியாழக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

லவ் மேரேஜா? அரேஞ்சுடு மேரேஜா?
கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!
தீபாவளிக்கு முன் மத்திய அமைச்சரவை மாற்றம்?
வியாபாரிகளுக்கு தீபாவளி பரிசு..!!

## கிரீஸ் நாட்டு அமெரிக்க தூதர் கிம்பர்லி கில்ஃபாயில் அதிரடி பணிநீக்கம்!

வாஷிங்டன், அக். 14–




கிரீஸ் நாட்டுக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றி வந்த கிம்பர்லி கில்ஃபாயில், டிரம்ப் ஆதரவாளர் ஒருவரிடம் பணம் கோரியது மற்றும் கிரீஸின் பெரும் கோடீஸ்வர தொழிலதிபர்களிடம் இருந்து சொகுசு வசதிகளைப் பெற்றுக் கொண்டது போன்ற தீவிரமான நிதி முறைகேடு புகார்களைத் தொடர்ந்து, டொனால்ட் டிரம்ப் அரசாங்கத்தால் பதவியில் இருந்து கட்டாயமாக நீக்கப்பட்டுள்ளார்.

டிரம்பின் புதிய பத்திரிகையாளர் சந்திப்புச் செயலாளர் கேட்டி சக்காரியா, தனது முதல் வெள்ளை மாளிகை ஊடகச் சந்திப்பில், "தூதர் கில்ஃபாயிலை நாங்கள் ராஜினாமா செய்யக் கேட்டுக்கொண்டோம்" என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

அதிபர் டிரம்பின் மூத்த மகனின் முன்னாள் காதலி ஆவார். இந்த நீக்கம் குறித்துப் பேசிய அதிபர் டொனால்ட் டிரம்ப், "அவர் தனது பணியைச் சிறப்பாகத்தான் செய்து வந்தார், ஆனால் அவரைப் பற்றி ஊடகங்களில் வந்த செய்திகள் எங்களுக்குப் பிடிக்கவில்லை" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கிம்பர்லி கில்ஃபாயிலுக்கு எதிராகத் தொடர்ந்து பல அதிர்ச்சியூட்டும் செய்திகளைச் சர்வதேச ஊடகமான தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல் வெளியிட்டு வந்தது. அவற்றில் முதன்மையான புகார்கள் வந்துள்ளன.

கடந்த ஜூலை 2025–ல் நடைபெற்ற செனட் சபையின் தூதர் அங்கீகாரக் கூட்டத்திற்குச் சற்று முன்பாக, டிரம்பின் தீவிர ஆதரவாளரான எரிக் டீட்டர்ஸ் என்பவரிடம் தனது ரூ.94 லட்சம் தனிப்பட்ட கிரெடிட் கார்டு கடனை அடைக்குமாறு கிம்பர்லி கோரியுள்ளார்.

மேலும், எந்தவொரு ஆதாரமும் சிக்காமல் இருக்க இந்தத் தொகையை 'வயர் டிரான்ஸ்ஃபர்' மூலம் அனுப்புமாறு அவர் அனுப்பிய குறுஞ்செய்திகளின் ஸ்கிரீன்ஷாட்டுகளையும் வெளியானது. எனினும், எரிக் டீட்டர்ஸ் இப்பணத்தைத் தர மறுத்துவிட்டார்.

கிரீஸ் நாட்டின் கட்டுமான நிறுவனமான 'ஆக்டர் குரூப்' தலைமை நிர்வாகி அலெக்சாண்ட்ரோஸ் எக்சார்ச்சு என்பவருடன் சேர்ந்து, சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்குக் கிம்பர்லி தனியார் ஜெட் விமானத்தில் பயணித்துள்ளார்.

அதுமட்டுமின்றி, கிரீஸ் நாட்டு கப்பல் அதிபரான நிகோலாஸ் சாகோஸ் என்பவரின் செலவில் பாரிஸின் சொகுசு ஹோட்டல் தங்குமிடம் மற்றும் சுவிஸ் பனிச்சறுக்கு ரிசார்ட்டான கஸ்டாட் ஆகிய இடங்களுக்குச் சொகுசுப் பயணம் மேற்கொண்டதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தன் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் மறுத்துள்ள கிம்பர்லி கில்ஃபாயில், தனது 'X' பக்கத்தில், "இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் முற்றிலும் பொய்யானவை; எனது பெயர், நற்பெயர் மற்றும் நேர்மையைக் காக்க நான் தீவிரமாகப் போராடுவேன்" என்று பதிவிட்டுள்ளார்.

மேலும், தூதராகத் தனது பதவிக்காலம் முடிவுக்கு வருவதை ஏற்றுக்கொண்டு, அதிபர் டிரம்ப் மற்றும் வெளியுறவுத்துறைச் செயலாளர் மார்கோ ரூபியோ ஆகியோருக்குத் தனது நன்றியையும், டிரம்ப் மீதான தனது விசுவாசத்தையும் தெரிவித்துள்ளார். தற்போது, அமெரிக்க வெளியுறவுத்துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல், கிம்பர்லி கில்ஃபாயில் விதிகளுக்குப் புறம்பாக இத்தகைய பரிசுப் பொருட்களைப் பெற்றாரா என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். அமெரிக்காவின் முக்கிய 'MAGA' இயக்கத்தின் முக்கிய முகமாக இருந்த கில்ஃபாயிலின் இந்த வீழ்ச்சி சர்வதேச அரசியலில் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

## சென்னை உயர் நீதிமன்றத்துக்கு புதிய நீதிபதிகள் நியமனம்: முதல்வர் விஜய் வாழ்த்து!

சென்னை, அக். 14–




"நீதித்துறையின் மிக உயர்ந்த மரபையும், கண்ணியத்தையும் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ள கூடுதல் நீதிபதிகளின் பணி சிறக்கட்டும்," என முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், "மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு கூடுதல் நீதிபதிகளாக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தர்மலிங்கம் லிங்கேஸ்வரன், பாலதண்டாயுதம் கார்த்திகேயன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். நீதியின் மாண்பையும், அரசியலமைப்பின் விழுமியங்களையும் பாதுகாக்கும் வகையில், நீதித்துறையின் மிக உயர்ந்த மரபையும், கண்ணியத்தையும் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ள தங்களின் பணி சிறக்கட்டும்" என்று முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

## பீகார்: கங்கை ஆற்றில் படகு கவிழ்ந்து குழந்தைகள், பெண்கள் உள்பட 14 பேர் பலி!

பீகார், அக். 14–



பீகாரின் வைஷாலி மாவட்டத்திற்கு உட்பட்ட ராகோபூர் தியாரா பகுதியிலிருந்து ராம்பூர் ஷியாம்சந்த் பகுதியில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சுமார் 20 முதல் 30 பேர் வரை ஒரு படகில் கங்கை ஆற்றைக் கடந்து சென்று கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. செவ்வாய்க்கிழமை நள்ளிரவு சென்றுகொண்டிருந்தபோது நடு ஆற்றில் எதிர்பாராதவிதமாக படகு நிலைதடுமாறி ஆற்றில் கவிழ்ந்தது. குழந்தைகள், பெண்கள் என அனைவரும் கூச்சலிட்ட நிலையில், படகில் இருந்த அனைவரும் ஆற்று நீருக்குள் தத்தளித்து உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயன்றனர்.

இருப்பினும், இந்தக் கோரச் சம்பவத்தில் முதற்கட்ட தகவலின் அடிப்படையில் 11 பேர் உயிரிழந்ததாக வைஷாலி மாவட்ட ஆட்சியர் வர்ஷா சிங் உறுதிப்படுத்தினார். ஆற்றில் மூழ்கிப் பலர் மாயமாகியுள்ளதால், அவர்களைத் தேடும் பணிகளும் மீட்பு நடவடிக்கைகளும் இரவிலிருந்து தீவிரமாக நடைபெற்று வருவதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் உள்ளூர் காவல் துறையினர், கிராம மக்களின் உதவியுடன் தீவிர மீட்புப் பணியில் இறங்கினர். ஆற்று நீரில் மூழ்கி குழந்தைகள், பெண்கள் உள்பட 14 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் மாயமா னவர்களைத் தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்தச் சம்பவத்தில் மீட்கப்பட்டவர்களுக்கு ஹாஜிபூர் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த விபத்துக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் மோடி, பலியானோரின் குடும்பங்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 2 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு ரூ. 50 ஆயிரமும் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

ராகோபூர் எம்.எல்.ஏவும், ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) தலைவருமான தேஜஸ்வி யாதவ் அளித்த தகவலின்படி, 6 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதே வேளையில் மேலும் 3 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர் என்றார்.

பீகாரின் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பாஜக முதல்வர் சம்ராட் சௌத்ரி, படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்ததோடு, பலியானோரின் குடும்பங்களுக்கு தலா ரூ. 4 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

## மாணவர்களே... ரெடியா?

# 10, 11, 12 பொதுத்தேர்வு அட்டவணை வெளியீடு!

## இலக்கு... அதிக மதிப்பெண்!!




சென்னை, அக். 14–

அரசுத் தேர்வுகள் இயக்ககம் சார்பாக 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வுக்கான அட்டவணையை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் வெளியிட்டார்

**தேர்வுக் காலம்**

| வகுப்பு | தேர்வு நடைபெறும் நாட்கள் |
|---|---|
| 12ஆம் வகுப்பு | மார்ச் 2 முதல் மார்ச் 29, 2027 வரை |
| 11ஆம் வகுப்பு — அரியர் | மார்ச் 3 முதல் மார்ச் 25, 2027 வரை |
| 10ஆம் வகுப்பு | மார்ச் 17 முதல் ஏப்ரல் 12, 2027 வரை |

**12ஆம் வகுப்பு: பாடவாரியான தேர்வு தேதிகள்**

| தேதி | பாடங்கள் |
|---|---|
| மார்ச் 2 | தமிழ் / மொழிப்பாடம் |
| மார்ச் 5 | ஆங்கிலம் |
| மார்ச் 9 | வேதியியல், கணக்குப்பதிவியல், புவியியல் |
| மார்ச் 13 | இயற்பியல், பொருளியல், வேலைவாய்ப்புத் திறன் |
| மார்ச் 17 | கணிதம், விலங்கியல், வணிகவியல், நுண்ணுயிரியல் |
| மார்ச் 26 | கணினி அறிவியல், கணினி பயன்பாடுகள், அரசியல் அறிவியல், புள்ளியியல் |
| மார்ச் 29 | உயிரியல், வரலாறு, தாவரவியல், வணிகக் கணிதம் |

**10ஆம் வகுப்பு: பாடவாரியான தேர்வு தேதிகள்**

| தேதி | பாடம் |
|---|---|
| மார்ச் 17 | தமிழ் / மொழிப்பாடம் |
| மார்ச் 25 | ஆங்கிலம் |
| மார்ச் 31 | கணிதம் |
| ஏப்ரல் 3 | விருப்ப மொழிப்பாடம் |
| ஏப்ரல் 7 | அறிவியல் |
| ஏப்ரல் 12 | சமூக அறிவியல் |

**11ஆம் வகுப்பு அரியர்: பாடவாரியான தேர்வு தேதிகள்**

| தேதி | பாடங்கள் |
|---|---|
| மார்ச் 3 | தமிழ் / மொழிப்பாடம் |
| மார்ச் 6 | ஆங்கிலம் |
| மார்ச் 10 | வேதியியல், கணக்குப்பதிவியல், புவியியல் |
| மார்ச் 16 | இயற்பியல், பொருளியல் |
| மார்ச் 20 | கணிதம், விலங்கியல், வணிகவியல் |
| மார்ச் 24 | கணினி அறிவியல், புள்ளியியல், மனையியல் |
| மார்ச் 25 | உயிரியல், வரலாறு, தாவரவியல், வணிகக் கணிதம் |

**பிப்ரவரியில் செய்முறைத் தேர்வுகள்**

10, 11ஆம் வகுப்பு அரியர் மற்றும் 12ஆம் வகுப்புகளுக்கான செய்முறைத் தேர்வுகள் பிப்ரவரி 2027இல் நடைபெறும் என வழங்கப்பட்ட தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**காலை 10 மணி முதல் பிற்பகல் 1.15 மணி வரை**

வினாத்தாளைப் படிக்க காலை 10 முதல் 10.10 மணி வரையும், தேர்வர் விவரங்களைச் சரிபார்க்க 10.10 முதல் 10.15 மணி வரையும் நேரம் ஒதுக்கப்படுகிறது. தேர்வு எழுதும் நேரம் காலை 10.15 முதல் பிற்பகல் 1.15 மணி வரை.

அதிகாரப்பூர்வ அட்டவணை: www.dge.tn.gov.in

## பசும்பொன் செல்லும் முதல்வர் விஜய்?

சென்னை, அக். 14–

பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 119வது பிறந்த நாள் விழா மற்றும் 64வது குருபூஜை, ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் வரும் 30ஆம் தேதி (30.10.2026) நடைபெற உள்ளது. இந்நாளையொட்டி தமிழக முதலமைச்சராகப் பதவி வகிப்பவர்கள் ஒவ்வொரு ஆண்டும் மதுரையில் உள்ள முத்துராமலிங்கத் தேவரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவர். அதனைத் தொடர்ந்து, ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னிற்குச் சென்று அவரது நினைவிடத்திலும் மரியாதை செலுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது.

இந்நிலையில், த.வெ.க. தலைவர் விஜய் முதலமைச்சரான பிறகு முதல்முறையாக அக்டோபர் 30ஆம் தேதி பசும்பொன்னிற்குச் சென்று முத்துராமலிங்கத் தேவரின் நினைவிடத்தில் நேரடியாக மரியாதை செலுத்த உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அரசு மற்றும் காவல்துறை தரப்பில் மேற்கொண்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த ஆண்டு தவெக சார்பில் அக்கட்சியின் முக்கிய நிர்வாகியான அமைச்சர் ஆனந்த், முத்துராமலிங்கத் தேவரின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தியது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொள்ள உள்ளனர்.



தலையங்கம்

# மதுரை மணி

**புதன்கிழமை 14.10.2026**

**விசுவாவசு தமிழ் வருடம்**

**புரட்டாசி மாதம் 27-ம் தேதி**

## விலைவாசி ஏறுகிறது... மக்களின் வாழ்வாதாரம் என்னாவது?



ஒரு மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியை முதலீடுகளாலும் தொழிற்சாலைகளாலும் மட்டும் அளந்துவிட முடியாது. சாதாரண குடும்பம் தனது மாத வருமானத்தில் உணவு, போக்குவரத்து, மருத்துவம் உள்ளிட்ட தேவைகளைச் சமாளிக்க முடிகிறதா என்பதும் வளர்ச்சியின் முக்கிய அளவுகோல். அந்த வகையில், தமிழகத்தின் பணவீக்கம் குறித்துப் வெளியாகியுள்ள தகவல்கள் கவனத்திற்குரியவை.

வெளியாகியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, செப்டம்பர் மாதத்தில் இந்தியாவின் நுகர்வோர் பணவீக்கம் 5.54 சதவீதமாக இருக்கும்போது, தமிழகத்தில் அது 6.81 சதவீதமாக உயர்ந்துள்ளது. புதுச்சேரியில் 6.86 சதவீதமாக உள்ளது. ஒடிசாவில் 6.70 சதவீதம், மத்தியப் பிரதேசத்தில் 6.68 சதவீதம் எனப் பதிவாகியுள்ள நிலையில், தமிழகத்தின் நிலை குறித்து அரசு தெளிவான விளக்கத்தை அளிக்க வேண்டியது அவசியம்.

இந்தப் புள்ளிவிவரங்கள் வெறும் பொருளாதாரக் கணக்குகள் அல்ல. சந்தைக்குச் செல்லும் குடும்பங்களின் செலவிலும், மாத இறுதியில் அவர்கள் எதிர்கொள்ளும் பணப் பற்றாக்குறையிலும் அதன் தாக்கம் வெளிப்படுகிறது.

குறிப்பாக, இந்தியாவின் சராசரி உணவுப் பணவீக்கம் 7.74 சதவீதமாக இருக்கும்போது, தமிழகத்தில் அது 10.62 சதவீதமாக இருப்பதாகச் செய்தி தெரிவிக்கிறது. உணவுப் பொருட்களின் விலை உயர்வு என்பது மக்கள் தள்ளிப்போடக்கூடிய செலவு அல்ல. வருமானம் உயராத நிலையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்தால், குடும்பங்கள் மற்ற தேவைகளுக்கான செலவைக் குறைக்க வேண்டிய கட்டாயம் உருவாகும்.

பருவமழைக் குறைவு, எல் நினோ தாக்கம், நீர்ப் பற்றாக்குறை மற்றும் விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட பாதிப்புகள் காரணங்களாகக் கூறப்படுகின்றன. வெங்காயம், இஞ்சி, பூண்டு, எலுமிச்சை உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வும் சுட்டிக்காட்டப்படுகிறது. காரணங்களைப் பட்டியலிடுவதுடன் அரசின் பணி முடிந்துவிடாது. நீர் மேலாண்மை, விளைபொருட்கள் சேமிப்பு, விநியோகம் ஆகியவற்றில் எங்கே குறைபாடு இருக்கிறது என்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊழியர்களுக்கான செலவு அதிகரிப்பதும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறப்படுகிறது. ஆனால், தொழிலாளர்களின் ஊதிய உயர்வை மட்டும் விலைவாசி உயர்வுக்கான விளக்கமாக முன்வைப்பது முழுமையான அணுகுமுறையாகாது. தொழிலாளர்களும் அதே விலைவாசி உயர்வை எதிர்கொள்கிறார்கள். உற்பத்தித் திறன், போக்குவரத்துச் செலவு, எரிசக்திச் செலவு உள்ளிட்ட அம்சங்களையும் சேர்த்தே மதிப்பிட வேண்டும்.

தமிழகத்தில் சரக்குப் போக்குவரத்து பணவீக்கம் 14.7 சதவீதமாக இருப்பதாகச் செய்தி குறிப்பிடுகிறது. பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை உயர்வு, பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு செல்லும் செலவை அதிகரிக்கிறது. அதன் சுமை இறுதியில் நுகர்வோரையே சென்றடைகிறது. எனவே, போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்கான நடைமுறை வாய்ப்புகளை அரசு ஆராய வேண்டும்.

தென்னிந்திய மாநிலங்களில் வாங்கும் திறன் அதிகமாக இருப்பதும் பணவீக்கத்திற்குக் காரணம் என்ற விளக்கம் முன்வைக்கப்படுகிறது. மாநிலத்தின் சராசரி வாங்கும் திறன் உயர்ந்திருக்கலாம். அதற்காக ஒவ்வொரு குடும்பமும் விலை உயர்வைத் தாங்கும் நிலையில் இருப்பதாகக் கருத முடியாது. தினக்கூலித் தொழிலாளர்கள், குறைந்த ஊதியம் பெறுவோர், ஓய்வூதியத்தை நம்பியிருப்போர் ஆகியோரின் நிலை தனித்துக் கவனிக்கப்பட வேண்டும்.

அரசு முதலில் இந்தப் புள்ளிவிவரங்களின் அடிப்படை, காலகட்டம் மற்றும் விலை உயர்வுக்கான காரணங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கண்காணித்து, விநியோகத் தடைகளைச் சரிசெய்து, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கான பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவது பொருளாதார நிர்வாகத்தின் பொறுப்பு மட்டுமல்ல; மக்களின் அன்றாட வாழ்வைப் பாதுகாக்கும் கடமையும் ஆகும். அந்தக் கடமை நிறைவேற்றப்படுகிறதா என்பதே இப்போது எழும் முக்கியக் கேள்வி.

**தலையங்கம்**
**எழுதியவர்: ஆசிரியர் மதுரை மணி**

## கோயில்களில் செல்போன் தடையில்லை!



சென்னை, அக். 14–

கோயில்களுக்குள் செல்போன் கொண்டு செல்ல தடையில்லை என்றும், அதே நேரத்தில் செல்போன்களை 'சுவிட்ச் ஆப்'செய்து எடுத்து செல்ல வேண்டும் என்று இந்து சமய அற நிலையத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைந்த பிறகு பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, கடந்த செப். 1 ஆம் தேதி முதல் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயில், திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், மதுரை அழகர் கோயில் உள்ளிட்ட 52 கோயில்களில் பக்தர்கள் போன் கொண்டு செல்ல இந்து சமய அறநிலையத்துறை தடைவிதித்தது. வழிபாட்டுத் தலங்களின் புனிதத்தையும் அமைதியான சூழலையும் பாதுகாப்பதையும், பக்தர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டு செல்போன் பயன்பாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டது. கோயில்களுக்குள் உள்ள தெய்வங்களையும் சிலைகளையும் பக்தர்கள் புகைப்படம் எடுப்பது அல்லது விடியோ பதிவு செய்வது போன்ற இடையூறு விளைவிக்கும் செயல்களைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் எஸ். ரமேஷ் கூறியிருந்தார்.

அதனைத்தொடர்ந்து, கோயில்களின் வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ள பாதுகாப்புப் பெட்டகத்தில் செல்போனை கொடுத்து விட்டு பக்தர்கள் கோவிலுக்குள் சாமி தரிசனம் செய்யவும், மொபல்போன் பாதுகாப்புக்கு ரூ.5 கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டு வந்தது. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் உள்ளிட்ட கோயில்களில் செல்போன் மட்டுமின்றி, சார்ஜர், ஹெட்போன்ஸ், கைக்கடிகாரம் உள்ளிட்டவற்றுக்கும் கட்டணம் வசூலிக்கப்பட்டதால் பக்தர்கள் பெரும் அவதியடைந்தனர்.

செல்போனை பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பதற்கு ஒரு மணிநேரத்துக்கும் மேலாகவும், சாமி தரிசனம் மற்றும் தரிசனம் முடித்துவிட்டு மீண்டும் செல்போனை பெறுவதற்கு ஒரு முறையும் என்று பக்தர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியிருந்ததால் பல்வேறு நெருக்கடிக்கு உள்ளாகி அசௌகரியத்தைச் சந்தித்தனர். இதனால், செல்போன் விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என்று கோயில்களுக்கு செல்லும் பக்தர்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தனர்.

செல்போனை பாதுகாப்பு பெட்டகத்தில் வைப்பதில் ஏற்படும் நடைமுறை சிக்கல்களை உணர்ந்த இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் ஆலோசித்து வந்தனர்.

இந்த நிலையில், பக்தர்களின் வசதிக்காக இந்து சமய அறநிலையத்துறை, செல்போன் கொண்டு செல்வதில் இருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தி சில தளர்வுகளை அறிவித்துள்ளது.

புதிய தளர்வுகளின் படி பக்தர்கள் இனி தங்களின் செல்போன்களை கோவிலுக்குள் எடுத்துச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், செல்போன்களை 'சுவிட்ச் ஆப்' செய்து எடுத்து செல்ல வேண்டும்.

கோயில்களுக்குள் செல்போனை கொண்டு செல்ல அனுமதி அளிக்கப்பட்டு இருந்தாலும், சிலைகள், பூஜைகளை புகைப்படம், விடியோ எடுப்பது, செல்பி, ரீல்ஸ் மற்றும் சமூக வலைதளப் பதிவுகளை எடுக்க விதிக்கப்பட்ட தடை நீடிக்கும் என்றும், இதனை மீறுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்து சமய அறநிலையத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

## தீபாவளிக்கு முன் மத்திய அமைச்சரவை மாற்றமா?



புதுடெல்லி, அக். 14–

மத்திய இணை அமைச்சர் எல். முருகன் ராஜினாமா கடிதம் அளித்துள்ள நிலையில், தீபாவளிக்கு முன்பாக மத்திய அமைச்சரவை மாற்றியமைக்கப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

தமிழகத்தில் பாஜகவின் அடித்தளத்தை வலுப்படுத்தவும், 2029 மக்களவைத் தேர்தலுக்காக முழுநேரக் கட்சிப் பணிகளில் ஈடுபடவும் விரும்புவதாக முருகன் தெரிவித்துள்ளார். அமைச்சர் பொறுப்பிலிருந்தும் மாநிலங்களவை உறுப்பினர் பதவியிலிருந்தும் தன்னை விடுவிக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியிடம் அவர் கோரியுள்ளார். அமைச்சரவை மாற்றத்தின்போது கூட்டணிக் கட்சிகளுக்கு கூடுதல் வாய்ப்பு வழங்கப்படுமா என்ற எதிர்பார்ப்பும் எழுந்துள்ளது. ஆனால், எந்தக் கட்சிக்கு எத்தனை இடங்கள் வழங்கப்படும், யார் அமைச்சராக நியமிக்கப்ப டுவார்கள் என்பது குறித்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கிடைக்கவில்லை. விலகல் அமைச்சரவை மாற்றம் குறித்த ஊகங்களை வலுப்படுத்தியிருந்தாலும், மாற்றத்தின் தேதி மற்றும் புதிய நியமனங்கள் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பே இறுதி நிலையைத் தெளிவுபடுத்தும்.

## தமிழக மருத்துவமனைகளுக்கு உத்தரவு!



சென்னை, அக். 14–

மருத்துவமனைகளில் சிகிச்சை கட்டணங்களை வெளிப்படையாக காட்சிப்படுத்த வேண்டும் என்று மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத் துறை செயலர் புன்ய சலிலா ஸ்ரீவஸ்தவா, அனைத்து மாநில தலைமை செயலர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: மருத்துவமனை களில் வெளிப்படைத் தன்மை கொண்டு வந்தால், நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சிகிச்சைக்கான செலவை முன்கூடியே திட்டமிடுவார்கள். கட்டணம் தொடர்பான தேவையற்ற குழப்பங்ளை தவிர்க்க முடியும். மருத்துவ சேவைகள் மீது பொது மக்களின் நம்பிக்கையை அதிகரிக்கும். அதனால், மருத்துவ நிறுவனங்கள் சட்டம் அமலில் உள்ள மாநிலங்களில், ஒவ்வொரு சேவைக்கான கட்டண விபரங்கள் ஆங்கிலம் மற்றும் அந்தந்த உள்ளூர் மொழியில் பொது மக்கள் எளிதில் பார்க்கும் இடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

மாநில பட்டியலில் சுகாதாரம் இருப்பதால், இவை முறையாக பின்பற்றப்படுகிறதா என்பதை தலைமைச் செயலர்கள் தனிப்பட்ட முறையில் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும். அதேபோல், மருத்துவ சுற்றுலாவாக வரும் வெளிநாட்டு நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை கட்டணங்களையும் வெளிப்படையாக காட்சிப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஆராம்கோ தலைமையகத்தில் ஏவுகணை தாக்குதல்.. ஹவுதி படையின் சம்பவம்.. ஆடிப்போன சவுதி அரேபியா..!!




ரியாத், அக். 14–

சவுதி அரேபியாவின் தஹ்ரானில் உள்ள ஆராம்கோ தலைமையக வளாகத்தில் அக்டோபர் 13ஆம் தேதி ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. நிர்வாகக் கட்டிடத்தில் ஏற்பட்ட சிறிய அளவிலான தீ விபத்தில் உயிரிழப்போ காயமோ ஏற்படவில்லை என சவுதி எரிசக்தித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஏமனில் ஹவுதி அமைப்பினருக்கும் சவுதி தலைமையிலான கூட்டுப்படைக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில் இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. முன்னதாக, ஏமன் தலைநகர் சனாவில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கப்படும் என்றும், ஆராம்கோ தலைமையகம் உள்ளிட்ட இடங்கள் இலக்காகலாம் என்றும் ஹவுதி தரப்பு எச்சரித்திருந்தது.

## தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டம்!



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு 1 கிராம் தங்க மோதிரங்களை வழங்கினார்கள். உடன் திருப்பூர் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமதி வி.சத்தியபாமா , பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் கே.ராம்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மரு.ரா.மனோன்மணி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி ஆகியோர் உள்ளனர்.

## கீழக்கரை நகராட்சியில் நான்கு வகை குப்பைகள் பிரிப்பு!



ராமநாதபுரம், அக். 14–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்தும் வகையில், வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை நான்கு வகைகளாகப் பிரித்து வழங்கும் பணிகளை நகர்மன்றத் தலைவர் செஹனாஸ் ஆபிதா நேரில் ஆய்வு செய்தார்.

மக்கும் குப்பைகள், மறுசுழற்சி செய்யக்கூடிய குப்பைகள், அபாயகரமான குப்பைகள் மற்றும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குப்பைகளைத் தனித்தனியாகச் சேகரிக்க தூய்மைப் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

கீழக்கரையை குப்பையில்லா நகராட்சியாக மாற்றும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.



## லவ் மேரேஜா? அரேஞ்ச்டு மேரேஜா?



திருமணம் என்பது ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் மிக முக்கியமான நிகழ்வாகும். திருமணம் பற்றி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு, திட்டம் இருக்கும். ஆனால் ஆசைப்படுவது போன்ற வாழ்க்கை அனைவருக்கும் அமைந்து விடுவது கிடையாது. அதற்கு நேர் மாறான வாழ்க்கையே பலருக்கும் அமைகிறது. ஆனால் நமக்கு அமைய போவது காதல் திருமணமா அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணமா என்பதை நியூமராலஜியை பலன்படுத்தி, நாம் பிறந்த தேதியை வைத்தே சொல்லி விடலாம்.

நியூமராலஜி, ஜோதிடத்தில் ஒரு வகை என்றாலும் ராசி, ஜாதகத்தின் மீது நம்பிக்கையில்லாத பலரும் கூட நியூமராலஜியை நம்புவது உண்டு. எந்த தேதியில் பிறந்தவர்களுக்கு எல்லாம் காதல் திருமணம் நடக்கும், எந்தெந்த தேதிகளில் பிறந்தவர்களுக்கு எல்லாம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடக்கும் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

**யாருக்கு காதல் திருமணம்?**

**எண் 5 :**

எந்த மாதமாக இருந்தாலும் 5 மற்றும் கூட்டுத்தொகை 5 வரும் எண்களான 14, 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு காதல் திருமணம் நடைபெறும். இவர்களின் விட்டுக் கொடுக்கும் தன்மை, சுதந்திரமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் ஆகியவை மற்றவர்களை எளிதில் ஈர்த்து விடும். இயல்பாகவே இவர்களுக்கு இருக்கும் எதையும் துணிந்து செய்யும் குணம், புதுமை மற்றும் உற்சாகத்தை விரும்பும் தன்மை ஆகியவை காதல் திருமணம் என்ற வழக்கத்திற்க மாறான முடிவையே இவர்களை எடுக்க வைக்கும்.

**எண் 3 :**

3, 12,21 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் பொதுவாக நன்கு பேசி மற்றவர்களை கவரக் கூடியவர்கள். மற்றவர்களுடன் சேர்ந்து இருப்பது, புதிதாக எதையாவது படைப்பது ஆகிய ஆற்றல்களை கொண்டவர்கள். இவர்கள் உற்சாகமாக, மகிழ்ச்சியாக இருக்க விரும்புவதுடன், தாங்கள் இருக்கும் இடத்தையும் கலகலப்பாக வைத்துக் கொள்ளக் கூடியவர்கள். இவர்களிடம் இருக்கும் கவர்ச்சி காதல் திருமணத்திலேயே கொண்டு போய் நிறுத்தும். இவர்கள் தங்களின் துணையிடம் அதிக பாசத்தையும், நெருக்கத்தை, உறுதியான பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ள கூடியவர்கள்.

**நினைத்த காரியங்கள் நிறைவேற பக்தருக்கு மஹா பெரியவா சொன்ன ரகசிய வழி**

**எண் 6 :**

6, 15, 24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு காதல் திருமணமே நடைபெறும். இந்த தேதிகளில் பிறந்தவர்கள் மிகவும் பொறுப்புள்ளவர்களாகவும், குடும்பத்தின் மீது அன்பும் அக்கறையும் கொண்டவர்களாக இருப்பார்கள். உறவுகளை மதிப்பவர்கள். இது போன்ற குணங்கள் இவர்களை காதல் பந்தத்தில் இணைய செய்யும். இவர்களுடைய காதல் திருமணம் தான் என்றாலும், அதையும் வீட்டாரின் சம்மதத்துடன் நடத்தும் திருமணமாக இருக்க வேண்டும் என விரும்புவார்கள்.

**நிச்சயிக்கப்பட்ட திருமணம் யாருக்கு ?**

**எண் 8 :**

8, 17, 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணமே நடக்கும். இவர்கள் சாதனை, சக்தி, ஆற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடையவர்களாக இருப்பார்கள். எப்போதம் தங்களின் குறிக்கோள், தொழில், வாழ்க்கை மீது முக்கியத்துவம் காட்டுபவர்கள். காதல் சிந்தனை இவர்களுக்கு குறைவு தான். இவர்கள் காதலை பற்றி பெரிதும் சிந்திக்காமல் இருப்பதால் இவர்களுக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணமே ஏற்படும்.

**எண் 4 :**

4, 22, 31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கும் நிச்சயிக்கப்பட்ட திருமணமே ஏற்படும். தங்கள் மீதான நம்பகத்தன்மையை எப்போதும் காப்பாற்ற வேண்டும் என நினைப்பவர்கள். சென்டிமென்ட்டிற்கு அதிக இடம் கொடுப்பவர்கள். இந்த குணங்கள் இவர்களுக்கு நிச்சயிக்க திருமணம் மீதே நம்பிக்கை, விருப்பத்தை ஏற்படுத்தும். இவர்கள் குடும்ப இயக்கங்கள் மீது அதிக அக்கறை, நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பார்கள்.

## பழனியில் குதிரை வண்டி குதிரைகளுக்கு தடுப்பூசி முகாம்!



பழனி அக்டோபர் 14–

பழனிக்கு சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் குதிரை வண்டிகளில், பழனி பஸ் நிலையத்திலிருந்து அடிவாரம் முருகன் கோவில் வரை செல்வார்கள். அதேபோல் சண்முக நதிக்கும் குதிரை வண்டியில் செல்வார்கள். குறிப்பாக கேரளா பக்தர்கள் பாரம்பரிய முறைப்படி பழனியில் குதிரை வண்டிகளில் சென்று வருகின்றனர். இந்நிலையில் குதிரை வண்டிகளை இழுத்துச் செல்லும் குதிரைகளின் உடல் நலனை பாதுகாக்கும் வகையில், கொடைக்கானலைச் சேர்ந்த, தனியார் அமைப்பு சார்பில், பழனியில் உள்ள குதிரைகளுக்கு தடுப்பூசி செலுத்தும் முகாம் நேற்று நடைபெற்றது. இதில் 60க்கும் மேற்பட்ட குதிரைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இதற்கான நிகழ்ச்சியில் பழனி நகராட்சி ஆணையர் ராஜ லட்சுமி, சுகாதார அலுவலர்கள் செந்தில் ராம்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நலம் நலமறிய..!

## மருத்துவ குறிப்புகள்



# இதய ஆரோக்கியத்தைப் பாதிக்கும் 7 காரணங்கள்... அலட்சியம் வேண்டாம்!



உயர் ரத்த அழுத்தம், அதிக கெட்ட கொழுப்பு, நீரிழிவு, புகைப்பழக்கம், இதயத் துடிப்புக் கோளாறுகள், உடற்பயிற்சியின்மை மற்றும் உடல் பருமன், எச்சரிக்கை அறிகுறிகளை அலட்சியப்படுத்துதல் ஆகியவை இதய ஆரோக்கியத்துக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

நெஞ்சில் அழுத்தம், மூச்சுத்திணறல், குளிர் வியர்வை, கை அல்லது தாடையில் வலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக அவசர மருத்துவ உதவியைப் பெற வேண்டும். சிலருக்கு நெஞ்சுவலி இல்லாமலும் மாரடைப்பு ஏற்படலாம். மாரடைப்பிலிருந்து வேறுபட்ட திடீர் இதய நிறுத்தம், இதய நோய் இருப்பது தெரியாதவர்களுக்கும் ஏற்படலாம். ஒருவர் சுயநினைவின்றி விழுந்து இயல்பாக மூச்சுவிடவில்லை என்றால், உடனடியாக அவசர உதவியை அழைத்து, சிபிஆர் முதலுதவி மற்றும் கிடைத்தால் AED கருவியைப் பயன்படுத்துவது உயிரைக் காப்பாற்ற உதவும்.

ரத்த அழுத்தம், சர்க்கரை, கொழுப்பு அளவைக் கண்காணித்தல், புகையிலையைத் தவிர்த்தல், சத்தான உணவு, உடற்பயிற்சி மற்றும் போதுமான தூக்கம் ஆகியவை ஆபத்தைக் குறைக்க உதவும்.



## சினிமா துளிகள்..!

# உலக சினிமா ரவுண்ட்அப்: புதிய டிரெய்லர்கள் முதல் சர்வதேசப் படங்கள் வரை!



**பாலிவுட்: ஆயுஷ்மான்சாரா கூட்டணியின் புதிய டிரெய்லர்!**

ஆயுஷ்மான் குரானா, சாரா அலி கான் நடித்துள்ள ‘உட்தா தீர்’ படத்தின் புதிய டிரெய்லர் இன்று வெளியாகியுள்ளது. நகைச்சுவை, ஆக்ஷன் மற்றும் சாகசம் கலந்த இப்படத்தை ஆகாஷ் ஏ. கௌஷிக் இயக்கியுள்ளார். அக்டோபர் 23 அன்று திரையரங்குகளில் வெளியாகிறது.

**அமிதாப் பச்சன்: ஓய்வு பெறும் எண்ணம் இல்லை!**

84 வயதை எட்டியுள்ள அமிதாப் பச்சன், நடிப்பிலிருந்து ஓய்வு பெறும் எண்ணம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். திரைப்பட இயக்கத்தில் ஈடுபடுவதையும் தான் பரிசீலிக்கவில்லை என்று கூறியுள்ளார். நீண்ட திரைப்பயணத்தைத் தொடர்ந்து பணியாற்றுவதிலேயே அவரது ஆர்வம் இருப்பதாக வெளியான செய்தி தெரிவிக்கிறது.

**டோலிவுட்: 18 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இணையும் ஜோடி!**

வருண் சந்தேஷ் மற்றும் ஸ்வேதா பாசு பிரசாத் ‘நா வைஃப் மிஸ்ஸிங்’ திரைப்படத்தில் மீண்டும் இணைகின்றனர். 18 ஆண்டுகளுக்குப் பிறகு இருவரும் இணைந்து நடிப்பது குறித்த செய்தி வெளியாகியுள்ளது.

**சந்தீப் கிஷனின் ‘கரிகாலா’ படத்தில் புதிய நடிகை!**

சந்தீப் கிஷன் நடிக்கும் ‘கரிகாலா’ திரைப்படத்தில் நடிகை சாக்ஷி மடோல்கர் இணைந்துள்ளார். படத்தின் நடிகர்கள் பட்டியலில் அவர் இடம்பெற்றிருப்பது குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

**கோலிவுட்: விஜே சித்துவின் ‘டயங்கரம்’ டிசம்பரில்?**

விஜே சித்து நடித்துள்ள ‘டயங்கரம்’ படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து, இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருவதாக வெளியான செய்தி தெரிவிக்கிறது. படம் டிசம்பரில் வெளியாகும் எனவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழ்–தெலுங்கில் சுஹாஸின் புதிய படம்!**

சுஹாஸ் கதாநாயகனாக நடிக்கும் ‘ஹைட் அண்ட் சில்க்’ திரைப்படம் தமிழ் மற்றும் தெலுங்கில் உருவாகிறது. படத்தின் அறிவிப்புக்கு நடிகர் சூரி வாழ்த்து தெரிவித்துள்ளதாக வெளியான செய்தி குறிப்பிடுகிறது.

**ஹாலிவுட்: ‘Runner’ டிஜிட்டல் வெளியீடு**

ஆலன் ரிட்சன், ஒவன் வில்சன் நடித்துள்ள ‘Runner’ திரைப்படத்தின் டிஜிட்டல் வெளியீடு அக்டோபர் 13 என அமெரிக்க வெளியீட்டுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்கியமான மருத்துவப் பொருளைச் சேர்ப்பிக்கும் பயணத்தில் ஆபத்துகளை எதிர்கொள்ளும் கதாபாத்திரங்களை மையமாகக் கொண்ட ஆக்ஷன் திரில்லர் இது. இந்தியாவில் கிடைக்கும் தளம் குறித்த தகவல் அந்தப் பட்டியலில் உறுதிப்படுத்தப்படவில்லை.

**உலக சினிமா: ‘Hope’ படத்திற்கான வெளியீட்டுத் தகவல்**

நா ஹாங்–ஜின் இயக்கத்தில், மைக்கேல் ஃபாஸ்பெண்டர், அலிசியா விகாண்டர் உள்ளிட்டோர் நடித்துள்ள ‘Hope’ திரைப்படத்திற்கு அக்டோபர் 13 அன்று குறிப்பிட்ட திரையரங்குகளில் வெளியீடு என அமெரிக்கப் பட்டியல் தெரிவிக்கிறது. எல்லைப் பகுதியிலுள்ள கிராமத்தில் உருவாகும் மர்மச் சம்பவங்களை மையமாகக் கொண்ட படம் இது.

**இந்தியாப்புவா நியூ கினி கூட்டுத் தயாரிப்பு: படப்பிடிப்பு தொடக்கம்!**

இயக்குநர் டாக்டர் பிஜுவின் ‘Mussau: The First Song’ திரைப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கியுள்ளது. இந்தியா பப்புவா நியூ கினி இணைப்பில் உருவாகும் இந்தப் படம் குறித்த செய்தி அக்டோபர் 12 அன்று வெளியானது.

# போப் லியோவுக்கு நுரையீரல் அறுவை சிகிச்சை: நலமுடன் தேறுவதாகத் தகவல்!

வாஷிங்டன், அக். 14–



ரோம் மருத்துவமனையில் போப் லியோவுக்கு நுரையீரல் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்றதாக வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கிறது. அவரது வலது நுரையீரலில் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்ட கட்டியை அகற்ற மருத்துவர்கள் பரிந்துரைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து, வலது நுரையீரலின் கீழ்ப்பகுதி அகற்றப்பட்டதாகவும், திசுப் பரிசோதனையில் அடினோகார்சினோமா வகை புற்றுநோய் உறுதியானதாகவும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற அறுவை சிகிச்சையில் சிக்கல்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகிச்சைக்குப் பிறகு சுயநினைவுக்குத் திரும்பிய அவர், உணவருந்தி தனது செயலாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் கலந்துரையாடியதாகக் கூறப்பட்டுள்ளது. மருத்துவமனையில் ஒரு வாரம் ஓய்வெடுப்பார் என்றும், அகற்றப்பட்ட திசுக்களில் கூடுதல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் செய்தி தெரிவிக்கிறது.

வாடிகன் அறிக்கையை மேற்கோள்காட்டி இந்த விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், போப்பின் உடல்நிலை மற்றும் அறுவை சிகிச்சை குறித்த தகவல்கள் இங்கு சுயாதீனமாகச் சரிபார்க்கப்படவில்லை என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

# கீழக்கரை நகராட்சியில் ABC, ARV பணிகள் தீவிரம்!

ராமநாதபுரம், அக். 14–



ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி, கீழக்கரை நகராட்சி, AWBI, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் International Trust of Peace அமைப்பின் ஒருங்கிணைப்புடன் தெருநாய்களுக்கான இனப்பெருக்கக் கட்டுப்பாட்டு (ABC) மற்றும் ரேபிஸ் தடுப்பூசி (ARV) பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இதுவரை 491 நாய்களுக்கு ARV தடுப்பூசி செலுத்தும் இலக்கு முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ABC அறுவை சிகிச்சைப் பணிகளில் 22 சதவீதம் நிறைவடைந்துள்ளது. அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களுக்கு V வடிவக் காது அடையாளமிடப்பட்டு, சிகிச்சைக்குப் பின்னர் அவை பிடிக்கப்பட்ட அதே பகுதிகளில் மீண்டும் விடப்படுகின்றன.

தெருநாய்கள் தொடர்பான புகார்கள் 24 மணி நேரமும் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும், வளர்ப்பு நாய்களுக்கு உரிய உரிமம் பெற்று முறையாகப் பராமரிக்குமாறு நகராட்சி நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

நகராட்சி ஆணையர் கிருஷ்ணவேணி தலைமையிலான நிர்வாக ஒருங்கிணைப்பில், சுகாதார ஆய்வாளர் பரக்கத்துல்லா மேற்பார்வையிலும், மேற்பார்வையாளர்கள் பாலா மற்றும் தஅஜய் கள ஒருங்கிணைப்பிலும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# வியாபாரிகளுக்கு தீபாவளி பரிசு..!!

சென்னை, அக். 14–



₹2,000க்கு மேற்பட்ட வணிக UPI பரிவர்த்தனைகளுக்கு விதிக்கப்படவிருந்த 0.40% வணிக தள்ளுபடி விகிதக் கட்டணம், தீபாவளிக்குப் பிறகு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக வழங்கப்பட்ட செய்தி தெரிவிக்கிறது.

அக்டோபர் 15 முதல் இந்த MDR கட்டணம் அமலுக்கு வரவிருந்ததாகவும், பண்டிகைக் கால விற்பனையை முன்னிட்டு வணிக அமைப்புகள் விடுத்த கோரிக்கையை ஏற்று NPCI இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தீபாவளி, தசரா காலங்களில் அதிக மதிப்பிலான பரிவர்த்தனைகள் நடைபெறுவதால், புதிய கட்டணம் வணிகச் செலவுகளை அதிகரிக்கும் என வியாபாரிகள் கவலை தெரிவித்திருந்தனர். ஃபின்டெக் மற்றும் பேமெண்ட் நிறுவனங்களும் நடைமுறைச் சிக்கல்களை முன்வைத்ததாகச் செய்தி குறிப்பிடுகிறது. இந்த ஒத்திவைப்பு, வங்கிகள், பேமெண்ட் சேவை நிறுவனங்கள் மற்றும் வணிகர்கள் புதிய கட்டண முறைக்குத் தயாராகக் கூடுதல் அவகாசம் அளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனிநபர்களுக்கிடையிலான UPI பணப்பரிமாற்றங்கள் தொடர்ந்து இலவசமாக இருக்கும் என்றும், குறிப்பிடப்பட்ட கட்டணம் வணிகர்களுக்கானது என்றும் செய்தியில் விளக்கப்பட்டு ள்ளது. புதிய அமலாக்க தேதி தீபாவளிக்குப் பிறகு அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தக் கட்டண விகிதம், வரம்பு மற்றும் ஒத்திவைப்பு குறித்த NPCI அதிகாரப்பூர்வ அறிவிப்பு இங்கு சுயாதீனமாக உறுதிப்படுத்தப்படவில்லை.

எனவே, வணிகர்கள் கட்டண மாற்றங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு முன், தங்களது வங்கி அல்லது பணப்பரிவர்த்தனைச் சேவை வழங்குநரின் அதிகாரப்பூர்வ தகவலைச் சரிபார்ப்பது அவசியம். செய்தியில் கூறப்பட்ட விவரங்களை உறுதிப்படுத்தப்பட்ட நடைமுறையாகக் கருதாமல், அறிவிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

# பொங்கலுக்கு முன் சிலிண்டர் பணம் வங்கிக் கணக்கில்? இல்லத்தரசிகள் எதிர்பார்க்கும் புதிய தகவல்!

சென்னை, அக். 14–



பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தமிழகத்தில் ‘அன்னபூரணி சூப்பர் சிக்ஸ்’ திட்டத்தின் கீழ் இலவச சமையல் எரிவாயு சிலிண்டருக்கான தொகையைப் பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால், திட்டத்தின் பலன்கள் எப்போது கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இல்லத்தரசிகளிடையே அதிகரித்துள்ளது.

**பயனாளர்களைக் கண்டறியும் ஆரம்பகட்டப் பணிகள்**

திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளில், தகுதியான பயனாளர்களை அடையாளம் காண்பது முக்கியப் பணியாக உள்ளது. இதற்காக எண்ணெய் நிறுவனங்களிடம் உள்ள வாடிக்கையாளர் விவரங்கள் மற்றும் தொடர்புடைய தரவுகளைச் சேகரிக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த விவரங்களின் அடிப்படையில், இலவச சிலிண்டர் திட்டத்தின் பலன்களைப் பெறத் தகுதியானவர்களைத் தேர்வு செய்ய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மகளிர் உரிமைத் தொகையைப் போல நேரடி பணப் பரிமாற்றம்?**

தமிழகத்தில் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட நலத்திட்டங்களில், தேர்வு செய்யப்பட்ட பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பணம் செலுத்தும் நடைமுறை ஏற்கெனவே பின்பற்றப்படுகிறது.

அதே முறையில், இலவச சமையல் எரிவாயு சிலிண்டருக்கான தொகையும் பயனாளர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைப்பது தொடர்பாகத் திட்டமிடப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

**யாருக்குக் கிடைக்கும்? எவ்வளவு தொகை வழங்கப்படும்?**

திட்டம் குறித்த தகவல் வெளியாகியுள்ள நிலையில், பொதுமக்களிடையே பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

இந்தத் திட்டத்தில் யாரெல்லாம் பயன்பெற முடியும்? விண்ணப்பங்களை எவ்வாறு சமர்ப்பிக்க வேண்டும்? விண்ணப்பிக்கத் தேவையான ஆவணங்கள் என்னென்ன? சிலிண்டருக்காக வழங்கப்படும் தொகை எவ்வளவு? அந்தத் தொகை எப்போது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்? இந்த விவரங்கள் குறித்த அறிவிப்பைப் பயனாளர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

அதிகாரப்பூர்வ அறிவிப்பே இறுதி விவரங்களை உறுதிப்படுத்தும் விண்ணப்பிக்கும் நடைமுறை, தகுதி நிபந்தனைகள் மற்றும் நிதி வழங்கப்படும் கால அட்டவணை குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் வரை, திட்ட த்தின் இறுதி விவரங்களை உறுதியாகக் கூற முடியாது.

குறிப்பாக, பொங்க லுக்கு முன்பே பணம் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுமா என்பதும் அதிகாரப்பூர்வ அறிவிப்பின் மூலமே உறுதியாகும். அரசு வெளி யிடும் அறிவிப்புகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின் அடிப்படையில் பயனாளர்கள் தங்களது தகுதியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.


இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881


2331731
4377877
தமிழ் நாட்டு வகை காரம் & இனிப்பு
மற்றும் வட மாநில இனிப்பு
தயாரிப்பு & விற்பனை நிலையம்
92, திருப்பரங்குன்றம் சாலை மற்றும் கிளைகள்

# வேலை வாய்ப்பு

## திண்டுக்கல் காந்திகிராம நிறுவனம் 6 பணியிடங்கள்!

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் 6 திட்ட உதவியாளர், கணினி உதவியாளர் மற்றும் ஆதரவுப் பணியாளர் பணியிடங்களுக்கான நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளது.

பணியிடம்: திண்டுக்கல்

நேரடி நேர்முகத் தேர்வு நாள்: 15.10.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: ruraluniv.ac.in

கல்வித்தகுதி, ஊதியம், நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேவையான ஆவணங்கள் உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

## தஞ்சாவூர் SZCC 25 பணியிடங்கள்!

தஞ்சாவூர் தென்னகப் பண்பாட்டு மையத்தில் (SZCC) நிரந்தர அடிப்படையில் 25 குரூப் A, குரூப் B (அரசிதழ் பதிவு பெறாத) மற்றும் குரூப் C பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியிடம்: தஞ்சாவூர்

விண்ணப்பிக்கும் காலம்: 19.09.2026 முதல் 03.11.2026 வரை

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: szccindia.org

கல்வித்தகுதி, ஊதியம், தேர்வு முறை மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

## HAL வேலைவாய்ப்பு 2026: 150 ஜூனியர் எக்ஸிகியூட்டிவ் பணியிடங்கள்!

இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனத்தில் குறுகிய கால அடிப்படையில் 150 ஜூனியர் எக்ஸிகியூட்டிவ் பணியிடங்களுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்: HAL/CHRC–TAR/RECT–03/2026

பணியிடம்: கர்நாடகா, தெலங்கானா, மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்காளம் மற்றும் உத்தரப் பிரதேசம்

விண்ணப்பிக்கும் காலம்: 07.10.2026 முதல் 17.10.2026 வரை

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: hal–india.co.in

கல்வித்தகுதி, ஊதியம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

## CSIRNCL – 24 MTS பணியிடங்கள்!

தேசிய வேதியியல் ஆய்வகத்தில் (CSIRNCL) நிரந்தர அடிப்படையில் 24 பல்பணிப் பணியாளர் (MTS) பணியிடங்களுக்கு ஆன்லைன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்: NCL/01–2026/MTS

பணியிடம்: புனே

விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள்: 05.10.2026 காலை 10 மணி

கடைசி நாள்: 04.11.2026 மாலை 5 மணி

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: recruit.ncl.res.in

கல்வித்தகுதி, வயது வரம்பு, ஊதியம் மற்றும் தேர்வு முறை உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

## சென்னை CSIRCLRI 9 பணியிடங்கள்!

சென்னை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (CSIRCLRI) ஒப்பந்த அடிப்படையில் 9 திட்ட உதவியாளர் மற்றும் திட்ட அசோசியேட் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

அறிவிப்பு எண்: 10/2026

பணியிடம்: சென்னை

எழுத்துத் தேர்வு நாள்: 27.10.2026

நேர்முகத் தேர்வு நாட்கள்: 28.10.2026 மற்றும் 29.10.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: clri.org

கல்வித்தகுதி, ஊதியம், தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேவையான ஆவணங்கள் உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

## கரூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு 2 பணியிடங்கள்!

கரூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் ஒப்பந்த அடிப்படையில் 2 இளநிலை உதவியாளர் பதிவறை எழுத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியிடம்: கரூர்

விண்ணப்பிக்கும் காலம்: 01.10.2026 முதல் 15.10.2026 வரை

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: karur.nic.in

கல்வித்தகுதி, ஊதியம் மற்றும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி உள்ளிட்ட விவரங்களுக்கு அதிகாரப்பூர்வ அறிவிப்பைப் பார்க்கவும்.

# இன்றைய கார்ட்டூன்

## நாட்டின் எதிர்காலமா... வீட்டின் எதிர்காலமா?




# ரூபாய் மதிப்பில் அழுத்தம்: ரிசர்வ் வங்கி நடவடிக்கையும் பட்ஜெட் வரி ஆலோசனைகளும் கவனத்தில்...!

புதுடெல்லி, அக். 14–

ரூபாய் மதிப்பில் ஏற்படும் அதிகப்படியான ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்த ரிசர்வ் வங்கி தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும் என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.



புளூம்பெர்க் நியூ எகனாமி ஃபோரம் நிகழ்வில் பேசிய அவர், ரூபாயின் மதிப்புச் சரிவுக்கு உலகளாவிய பொருளாதாரச் சவால்களே முக்கியக் காரணம் எனக் குறிப்பிட்டார். இந்தியாவின் வலுவான பொருளாதார அடித்தளமும் நிதி ஒழுங்குமுறையும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையைத் தக்கவைக்கும் என்றும் கூறினார்.

வரவிருக்கும் பட்ஜெட் ஆலோசனைகளில், நீண்டகால மூலதன ஆதாய வரி நீக்கம் மற்றும் பங்குச் சந்தை வரிவிதிப்பு தொடர்பாக உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கருத்துகளைக் கேட்க அரசு ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்தார். எனினும், வரி நீக்கம் குறித்த இறுதி முடிவு அறிவிக்கப்படவில்லை.

நடுத்தர வர்க்கத்தினரின் வாங்கும் திறன் அதிகரிப்பது, உள்நாட்டுச் சந்தை மற்றும் ஏற்றுமதிக்கான உற்பத்தியை விரிவுபடுத்த ஊக்கமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், தேசிய உள்கட்டமைப்புத் திட்டம் 4.5 டிரில்லியன் டாலரைத் தாண்டியுள்ளதாகவும், தேவையான நிதியைத் திரட்டுவதில் NaBFID மற்றும் NIIF முக்கியப் பங்காற்றுவதாகவும் தெரிவித்தார்.

# நயினாருக்கு மத்திய அமைச்சர்? முருகனுக்கு பாஜக தலைவர்?

சென்னை, அக். 14–

தமிழகத்தில் கட்சிப் பணிகளில் கவனம் செலுத்துவதற்காக எல். முருகன் மத்திய அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளதாகச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. அவருக்கு மீண்டும் தமிழக பாஜக தலைவர் பதவி அல்லது 2029 தேர்தலுக்கான சிறப்புப் பொறுப்பு வழங்கப்படலாம் எனப் பேசப்படுகிறது. நயினார் நாகேந்திரனுக்கு மத்திய அமைச்சர் பதவி கிடைக்கலாம் என்றும் தகவல்கள் உலவுகின்றன. இந்தப் பதவி மாற்றங்கள் குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை எனத் தெரிகிறது.



# டெல்லியில் சிஜேபி நிர்வாகிகள் கைது - மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக். 14–

டெல்லியில் சிஜேபி நிர்வாகிகள் கைது செய்யப்பட்டதற்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்து ள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,



* எத்தனை இளைஞர்களின் குரல்களை பாஜகவால் ஒடுக்க முடியும்

* இந்த அரசாங்கத்தால் எத்தனை போராட்டக்காரர்களை கைது செய்ய முடியும்.

* எவ்வளவு இளைஞர்களை சிறையில் அடைக்கிறார்களோ அவ்வளவு மக்கள் அவர்களுக்கு ஆதரவாக போராடுவார்கள்.

* சாதாரண குடிமக்களும் வீதிக்கு வந்து மக்களுக்கு இருக்கும் உண்மையான சக்தியை அவர்களுக்கு காட்டுவார்கள்.

* சவுரவ் தாஸ், அஷுதோஷ் ரங்காவுக்கு தேவையான சட்டரீதியான ஆதரவை வழங்க திமுக தயாராக உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மீனாட்சி கோயில் வி.ஐ.பி. தரிசனத்தில் விதிமீறல்: பணியாளருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ்!

மதுரை, அக். 14–

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் அம்மன் சன்னதி வி.ஐ.பி., பகுதியில் சிலரை கோயில் பணியாளர் ஒருவர் தன் 'செல்வாக்கை' பயன்படுத்தி அனும தித்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. மீனாட்சி கோயில் கும்பாபிஷேகம் செப். 17ல் நடந்தது. அதன்பிறகு பக்தர்கள் கூட்டம் தொடர்ந்து அதிகரித்தது. 6 மணி நேரம் வரை வரிசையில் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர். அதேசமயம் வி.ஐ.பி.,க்கள் சிறப்பு வழியாக அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கு கோயில் உள்துறை அலுவலகத்தில் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். நேற்று முன்தினம் அம்மன் சன்னதி வி.ஐ.பி., பகுதியில் செந்தில் என்பவர் பணியில் ஈடுபட்டிருந்தார். வி.ஐ.பி., பகுதியில் கும்பலாக சிலரை அனுமதித்துக் கொண்டிருந்ததைக் கண்காணிப்பு கேமராவில் பார்த்த கோயில் இணை கமிஷனர் செல்லத்துரை நேரில் விசாரித்தார். அப்போது உள்துறை அலுவலகம், பேஷ்கார் உள்ளிட்டோரிடமிருந்து எந்த அனுமதியும் பெறாமல் சக பணியாளர் ஒருவர் சொன்னதால் விதிகளை மீறி அனுமதி த்தது தெரிந்தது. இதுதொடர்பாக செந்திலிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.



**போலி கல்விச்சான்று**

மீனாட்சி கோயிலில் கடந்த தி.மு.க., ஆட்சியில் பத்தாம் வகுப்பு கல்வித்தகுதி அடிப்படையில் குறிப்பிட்ட பணிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் 28 பேர் போலி கல்விச்சான்று கொடுத்தது கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. போலி கல்விச்சான்று கொடுத்தவர்க ளில் செந்திலும் ஒருவர். 8 பேர் பணி ஓய்வு பெற்றுவிட்டனர். மீதமுள்ள 20 பேர் தொடர்ந்து பணிபுரிகின்றனர். இவர்களை 'டிஸ்மிஸ்' செய்ய அமைச்சர் ரமேஷ் தரப்பில் அறிவுறுத்தப்பட்டு ள்ளதால் அதற்கான நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

# மதுரையை ஆளும் மீனாட்சி அம்மன்! திருக்கரத்தில் செங்கோல் ஏந்தும் மரபின் பின்னணி என்ன?



செங்கோல் என்பது செம்மையான, குற்றமற்ற, பாகுபாடற்ற அறத்தையும் தர்மத்தையும் கடைப்பிடிக்கும் அரசாட்சியின் அடையாளமாகும். இத்தகைய அடையாளக் குறியீடாகவே மத்திய அரசு இந்திய நாடாளும ன்றத்தில் செங்கோலை நிறுவியது. செங்கோல், பாரம்பரியத் தொடர்புடைய ஓர் ஆட்சிச் சின்னமாக விளங்குகிறது. பல்வேறு அரசர்கள் தங்களது கைகளில் ஒரு தண்டத்தை வைத்திருப்பார்கள். அதன் மேற்பகுதியில் அவரவர்களுக்குரிய வடிவத்தையோ உருவத்தையோ பொருத்தியிருப்பார்கள். பல நாடுகளின் அரசர்கள் மற்றும் இனக்குழுத் தலைவர்களின் கைகளில் உள்ள தண்டங்களே இதற்குச் சான்றாகும். அரசர்கள் செங்கோல் வைத்திருப்பது இயல்பு. ஆனால், தெய்வத்தின் கையிலும் செங்கோல் இருக்குமா? இருக்கும் என்பதற்கு மதுரை மீனாட்சி சொக்கநாதர் பட்டாபிஷேக விழா நிகழ்ச்சிகளே சாட்சியாக விளங்குகின்றன.

**மதுரைத் திருக்கோயிலின் தனிச்சிறப்பு;**

திக்விஜயம் என்பது மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் சிறப்புகளில் ஒன்றாகும். மற்ற ஆலயங்களில் அம்பு எய்துதல் என்னும் சடங்கு மரபு உண்டு. நவராத்திரி காலத்தில் அசுர வதத்திற்காகப் போரிடும் நிகழ்வைக் குறிக்கும் வகையில், அம்மன் அம்பு எய்துதல் அல்லது முருகப்பெருமான் வேல் எறிதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஆனால், பட்டாபிஷேகம், செங்கோல் வழங்குதல், எட்டுத் திசைகளுக்கும் சென்று திக்பாலகர்களுடன் போரிடும் திக்விஜயம் போன்ற நிகழ்ச்சிகளை காண முடியாது. பழங்காலத்தில் அரசர்களுக்கு நடைபெறும் பட்டாபிஷேகமும் செங்கோல் சாற்றும் நிகழ்ச்சியும் மதுரைத் திருக்கோயிலில் நடைபெறுவது ஏன்? எப்போது, யாரால், எந்தக் காலத்தில் இந்த மரபு தொடங்கப்பட்டது? இத்தகைய கேள்விகளுக்குப் பதிலாக ஒரு வரலாற்று நிகழ்வை முன்வைக்க விரும்புகிறேன்.

**மீனாட்சியின் அவதாரமும் திக்விஜயமும்;**

புராணத்தின்படி, மலையத்துவஜ பாண்டியனுக்கும் காஞ்சனமாலைக்கும் மகளாக, வேள்விக் குண்டத்திலிருந்து உதித்தவள் மீனாட்சி. ஆணுக்கு நிகராக வளர்க்கப்பட்டு, எட்டுத் திசைகளிலும் போரிட்டு வெற்றி பெற்று, சுந்தரேஸ்வரரை மணந்த அவளது வரலாறு அனைவரும் அறிந்ததே. எனவே, அதனை இங்கு விரிவாக எடுத்துரைக்க விரும்பவில்லை.

அந்தச் சமயத்தில் திக்விஜயம், பட்டாபிஷேகம் போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்க வேண்டும். அவற்றை நினைவுகூரும் வகையிலேயே அந்த நிகழ்வுகள் மீண்டும் நிகழ்த்திக் காட்டப்படுகின்றன.

பாண்டிய மன்னர்களின் பெயர்களில் முதல் அரசனாகச் சோமசுந்தர பாண்டியன் குறிப்பிடப்படுகிறார். அந்த அரசனின் பெயரிலிருந்து பாண்டி யர்களின் வரலாறு தொடங்குவதாகக் கூறப்படுகிறது. மதுரை சிவபெருமானின் பழைய பெயர் திருவாலவாயுடையார். பின்னாளில் சோமசுந்தரம், சுந்தரேஸ்வரர், சொக்கநாதர், அபிஷேகப் பாண்டியன் (சொக்கன்), கற்பூரப் பாண்டியன் (சொக்கன்) எனப் பாண்டிய அரசர்களின் பெயர்களோடு தொடர்புடைய பெயர்களாலும் சிவபெருமான் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதேபோல், தடாதகைப் பிராட்டி, அங்கயற்கண்ணி, பாண்டிமாதேவி, திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியார் என அழைக்கப்பட்ட அம்மன், பின்னாளில் மீனாட்சி என்ற பெயரைப் பெற்றதாகக் கருதப்படுகிறது. இந்தப் பெயர் மாற்றம் நாயக்கர்கள் காலத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

**செங்கோல் சாற்றும் மரபு தொடங்கியது எப்போது?**

நாயக்கர்கள் காலத்தில்தான் செங்கோல் சாற்றும் பழக்கம் தொடங்கியது என்றால் ஆச்சரியப்படுவீர்கள். முதலில் மீனாட்சி அம்மனின் கருவறை மூர்த்திக்கே செங்கோல் சாற்றும் பழக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாகவே, அம்மன் சன்னதிக்கு முன்பாக உள்ள ஆறுகால் பீடத்தில் உற்சவ அம்மனுக்கு இருவகைப் பட்டர்களும் இணைந்து செங்கோல் சாற்றி வருகின்றனர்.

**முதன்முதலில் இந்தச் செங்கோலைச் செய்து வழங்கியவர் யார் தெரியுமா?**

நாயக்கர் வம்சத்தில் வந்த பங்காரு திருமலையின் மகன் விஜயகுமார முத்துத் திருமலை, ஆங்கீரச ஆண்டு, மார்கழி மாதம் 15ஆம் நாள், கி.பி. 1752இல் அரசராக்கப்பட்டதாகவும், அப்போது மூலஸ்தானத்தில் உள்ள மீனாட்சி அம்மனுக்குச் செங்கோல் வழங்கப்பட்டதாகவும் வரலாற்று நூலில் பதிவிடப்பட்டுள்ளது.

விஜயரங்க சொக்கநாதரின் மனைவி மீனாட்சி அரசிக்கு வாரிசு இல்லாததால், தனது சகோதரர் பங்காரு திருமலையின் மகன் விஜயகுமார முத்துத் திருமலையைச் சுவீகாரப் புத்திரராக ஏற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சுவீகாரப் புத்திரரான விஜயகுமார முத்துத் திருமலை ஆட்சி செய்த காலம் சுமார் ஒன்றரை ஆண்டுகள். இந்தக் காலகட்டத்திலேயே அவரால் செங்கோல் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. தனது தாயாரான மீனாட்சி அரசியின் ஆசீர்வாதத்தால் ஆட்சி செய்வதாக நினைத்து, அவரது நினைவாக உலகை ஆளும் அரசியான அங்கயற்கண்ணி மீனாட்சிக்குச் செங்கோல் செய்து சாற்றியிருக்கலாம்.

இந்தக் காலத்திலிருந்தே செங்கோல் சாற்றும் நிகழ்ச்சியும் அதற்கான பழக்கவழக்கமும் ஏற்பட்டிருக்க வேண்டும். அன்று முதல் இன்று வரை இறையருளால் இந்த மரபு சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**அரசர்களுக்குப் பிறகு தொடர்ந்த வழிபாட்டு மரபு;**

அரசர்கள் காலத்திற்குப் பிறகு, மதுரைத் திருக்கோயில் பட்டர்கள் செங்கோலைத் தங்கள் கைகளில் ஏந்தி, ஆலயத்தைச் சுற்றி வந்து, பூஜைகள் செய்து அம்மனுக்குச் சாற்றினர்.

இந்தக் காலகட்டத்தில் அவர்களுக்குள் உரிமைப் பிரச்சினைகள் ஏற்பட்டபோது, அவை அவ்வப்போது தீர்த்து வைக்கப்பட்டன.

இன்றைய ஜனநாயகக் காலத்தில், அரசரின் இடத்தை ஆலயத்தை நிர்வகிக்கும் தர்மகர்த்தாக்கள் எனப்படும் அறங்காவலர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். செங்கோலை ஏந்தி ஆலயத்தைச் சுற்றி வந்து, அங்குள்ள பட்டர்களிடம் வழங்கி அம்மனுக்குச் சாற்றுவதைத் தங்களது பாக்கியமாகவும் பெருமையாகவும் அவர்கள் கருதுகின்றனர். அன்றைய பட்டர்கள் காலத்திலிருந்து இன்றைய காலம் வரை, இந்த நிகழ்வை யார் நடத்த வேண்டும் என்பதை மீனாட்சி சொக்கநாதரே முடிவு செய்கிறார்கள் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அரசியலில் யார் ஆட்சி செய்தாலும், ஆட்சிகள் மாறலாம்; காட்சிகளும் மாறலாம். ஆனால், மதுரையை ஆட்சி செய்வது மீனாட்சிசுந்தரேஸ்வரரே; அது என்றும் மாறாது என்பதே பெரும்பான்மையான பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

நன்றி.



ஆதிசைவன்
எஸ். சங்கரன்
வழக்கறிஞர், மதுரை

# ரெயில்களில் அதிக சத்தத்துடன் பாடல் கேட்டால் 6 மாதம் சிறை!

சென்னை, அக். 14–

தெற்கு ரெயில்வே பயனாளர் ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜாபர் அலி கூறியதாவது:–




ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில் பயணிக்கும்போது, பயணியர் சிலர் தங்கள் மொபைல் போனில், ''ஹெட்போன்' பயன்படுத்தாமல், அதிக சத்தத்துடன் பாடல்கள் கேட்பது, 'ரீல்ஸ்' மற்றும் வீடியோ பார்ப்பது, 'கேம்' விளையாடுவது, போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இது சக பயணிகளுக்கு தொந்தரவை ஏற்படுத்துகிறது. இது குறித்து, பயணிகள் பலரும் புகார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, ஜன விஷ்வாஸ் சட்டம், திருத்தப்பட்ட ரெயில்வே சட்டப் பிரிவின் கீழ், பொதுமக்களுக்கு தொந்தரவு தரும் செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. அதன்படி, ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில், மொபைல்போனில் 'ஹெட்போன்' பயன்படுத்தாமல், அதிக சத்தத்துடன் பாட்டு கேட்பது, வீடியோக்களை பார்ப்பது போன்ற செயல்களால் சக பயணியருக்கு தொல்லை கொடுத்தால், இனி ரூ.1,000 அபராதம் அல்லது ஆறு மாதங்கள் சிறை தண்டனை அல்லது இரண்டு தண்டனையும் சேர்த்து விதிக்கப்படும்.

இதுதொடர்பாக அனைத்து கோட்டங்களுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அபராதத்தை, டிக்கெட் பரிசோதகர் அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரம் கொண்ட வணிகப்பிரிவு அலுவலர்கள் வசூலிப்பார்கள். எச்சரிக்கையை மீறி தொடர்ந்து தொந்தரவு அளித்தால் ரூ.5,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# தீபாவளி பண்டிகைக்கு 95 சிறப்பு ரெயில்கள் இயக்கம்?

சென்னை, அக். 14–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 95 சிறப்பு ரெயில்களை இயக்க தெற்கு ரெயில்வே திட்டமிட்டுள்ளது. இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை நவம்பர் 8–ந்தேதி கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை கொண்டாட சென்னையில் இருந்து 9 லட்சத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்குச் செல்வார்கள். இவர்கள் பெரும்பாலும் ரெயில் பயணத்தையே தேர்வு செய்கிறார்கள். ரெயில் டிக்கெட் முன்பதிவை பொறுத்தவரை 60 நாட்களுக்கு முன்பே தொடங்கி விடுகிறது. அந்த வகையில், இந்த ஆண்டு தீபாவளிக்கு சொந்த ஊர் செல்வோருக்கான ரெயில் டிக்கெட் முன்பதிவு கடந்த மாதம் 6–ந்தேதி தொடங்கி 9–ந்தேதி வரை நடைபெற்றது. ஏராளமானோர் ஒரே நேரத்தில் டிக்கெட் முன்பதிவு செய்ததால், ஒருசில நிமிடங்களிலேயே அனைத்து ரெயில்களிலும் டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்தன. பலரும் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். இவர்கள் தீபாவளி சிறப்பு ரெயில் அறிவிப்புக்காக காத்திருக்கி ன்றனர். எனவே, பயணிகளின் வசதிக்காக நடப்பாண்டு தீபாவளி பண்டிகைக்கு 95 சிறப்பு ரெயில்களை இயக்க தெற்கு ரெயில்வே திட்டமிட்டுள்ளது.



இதுகுறித்து ரெயில்வே அதிகாரிகள் கூறுகையில், "கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு தெற்கு ரெயில்வேயில் இருந்து, நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளுக்கு 85 சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டன. நடப்பாண்டு அதைவிட சற்று கூடுதலாக 95 ரெயில்கள் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

ஆனால், இது பயணிகளின் தேவையை பொறுத்து கடைசி நேரத்தில் மாறுபடும். இதேபோல், சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு 20 சிறப்பு ரெயில்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் ரெயில்களில் டிக்கெட்டுகள் உடனடியாக விற்றுத்தீர்ந்துவிடுகிறது. எனவே, 20 ரெயில்கள் தவிர சென்னையில் இருந்து நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோவில், மதுரை, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளுக்குக் கூடுதல் சிறப்பு ரெயில்கள் இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். தீபாவளி சிறப்பு ரெயில்கள் இயக்குவது குறித்து விரைவில் ரெயில்வே வாரியத்திற்கு பரிந்துரை அனுப்ப இருக்கிறோம்.

இவ்வாறு அதிகாரிகள் கூறினார்கள்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020